## SUBORDINATE COURT, PADMANABHAPURAM

**CASE NO.MCOP.33/2018**
**Deposition of P.W.1-** ரவி
**Dated:** 09.02.2024

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

19.09.2017 அன்று மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்திற்கு முன்பு உள்ள காதீம்ஸ் கடை அருகில் நடைபெற்றது. மனு விபத்தின் போது எனக்கு சொந்தமாக இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட எனது மனைவி எனக்கு பின்னால் மேற்படி இருசக்கர வாகனத்தில் அமர்ந்து பயணம் செய்தார். எனது மனைவி தையல் தொழில் செய்து வந்ததார். அது சம்மந்தமாக தொழிலாளர் நலவாரியத்திற்கு செல்வதற்காக நானும், எனது மனைவியும் நாகர்கோவில் சென்றோம். மேற்படி தொழிலாளர் நல வாரியம் ராம வரம்பபுறம், கிழக்கு காலணி ரோட்டில் உள்ளது. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 74 – 5735. நான் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில்தான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் நாள் ஒட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு எண். TN 74 – 5734 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1 வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேரூந்து எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்துக்கொண்டிருந்தது என்றால் திசை எனக்குத் தெரியாது. ராம வரம்பபுறம், கிழக்கு காலணி ரோட்டிலிருந்து – திங்கள்நகர் செல்லும் பாதையை நோக்கி வந்துக்கொண்டிருந்தது. மேற்படி பேரூந்து செட்டிக்குளத்திலிருந்து – பார்வதிபுரம் நோக்கி வந்துக்கொண்டிருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் தெற்கிலிருந்து – வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். நான் தெற்கிலிருந்து – வடக்கு நோக்கி வந்து மேற்காக திரும்பும் போது நான் நிலைதடுமாறி கீழே விழுந்து மனு விபத்து ஏற்பட்டது என்றால் பேரூந்து எனது இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதியதால் மனு விபத்து ஏற்பட்டது. பேரூந்து எனது இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. பேரூந்து இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதியிருந்தால் இருசக்கர வாகனத்தின் பின்புறம் முழுமையாக சேதம் அடைந்திருக்கும் என்றால் இருசக்கர வாகனத்தின் பின்புறம் சேதமடைந்தது. நானும் இருசக்கர வாகனமும்இடதுபுறம் விழுந்தோம். எனது மனைவி வலது புறம் விழுந்தாள். எனதுஇருசக்கர வாகனத்திற்கு பின்புறம் எவ்வித சேதமும் கிடையாது என்றால் சரியல்ல. 1 வதுஎதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேரூந்தை

ஓட்டி வந்து எனது இருச்கர வாகனத்தின் பிற்புறம் மோதியதாக கூறுவது பொய் என்றால்ச ரியல்ல எனது கவளகுறைவாலும் அஜாக்கிரதையால் தான் மனு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேரூந்திற்கு எவ்வித சேதமும் கிடையாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தற்போது வேலை எதுவும் இல்லாமல்இருந்து வருகிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் வங்கியில் செக்யூரிட்டியாக வேலை செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன். நான் நாகர்கோவிலுள்ள திலகராம் மருத்துவமனையில் இரண்டு நாட்கள் உன்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தேன். 16.11.2017 க்கு பிறகு எனக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படவில்லை. எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரிதான். மனு விபத்தினால் எனக்கு வருமான இழப்போ அல்லது வருமான ஈட்டுதிறன் இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு தொகை, வட்டி விகிதிம் அதிகமானது என்றும், எனக்கு கிடைக்கததக்கது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகன்ததை ஓட்ட வில்லை என்றும் 1 வது எதிர்மனுதாரர்மனு விபத்திற்கு காரணம் கிடையாது என்றும் நான் தான் மனு விபத்திற்கு காரணம் என்றும். எனக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் கிடையாது என்றும் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையானவை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.